மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம், இராமநாதபுரம்

**முன்னிலை: திரு.ஏ.கே.மெஹ்பூப் அலி கான்,** B.L.M., L.L.M.,PG.D.PM/IR, Dip.in.J.J & J.Psy., PG.D.D.F.,

விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 07-ம் நாள் சனிக்கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசித்திங்கள் 23ம் நாள் சனிக்கிழமை

**மோ.வா.வி.கோ.தீ மனு எண். 201 /2024**

**(CNR.TNRM-01-004733-2024)**

***

1. இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் டவுன், கதவு எண்.3, கோழிக்கூட்டு தெருவில் வசித்து வரும் லேட்.ஹாஜா முகைதீன் அவர்கள் மனைவி, முஸ்லீம், சுமார் 59 வயதுள்ள ஜஹான் பீவி.

2. இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் டவுன், கதவு எண்.3, கோழிக்கூட்டு தெருவில் வசித்து வரும் லேட்.ஹாஜா முகைதீன் அவர்கள் குமாரர், முஸ்லீம், சுமார் 32 வயதுள்ள பைசுல் நபிஸ்.

3. இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் டவுன், கதவு எண்.3, கோழிக்கூட்டு தெருவில் வசித்து வரும் லேட்.ஹாஜா முகைதீன் அவர்கள் குமாரர், முஸ்லீம், சுமார் 27 வயதுள்ள செய்யது ஹசன்.

... மனுதாரர்கள்

/எதிர்/

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுகா, ஆவரைக்குளம் கிராமத்தில், கதவு எண்.4/210, பாக்கியவிளை தெருவில் வசித்து வரும் ஜெயக்குமார் அவர்கள் குமாரர், கிறிஸ்துவர், சுமார் 35 வயதுள்ள பாலஸ்டாலின்.

...எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்னர் 04.03.2026-ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சுந்தர்ராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜர்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:48:20 +0530

இல்லை என்பதால் அவரைப் பொறுத்து ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், இந்நீதிமன்ற ஆய்விற்குட்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரும்...

## உத்தரவு

கடந்த 10.10.2023 அன்று ஏற்பட்ட சாலை விபத்தின் காரணமாக இறந்துபோன செய்யது உசேன் என்பவரின் வாரிசுகளான மனுதாரர்களுக்கு விபத்து இழப்பீட்டு தொகையாக ரூ.3,31,06,780/-த்தை மனுதாக்கல் தேதியிலிருந்து நீதிமன்றத்தில் செலுத்தும் தேதிவரை 12 சதவீத வட்டியுடன் வழுங்கக்கோரி திருத்தப்பட்ட மோட்டார் வாகன விபத்து சட்டம் 1988 பிரிவுகள் 140, 141, 142 மற்றும் 166ன் படியும், உடன் இணைந்த மோட்டார் வாகன கோருமை தீர்ப்பாயை விதிகள் திருத்தப்பட்ட சட்டம் 54/1994 விதி 3(1)ன் படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-**

கடந்த 10.10.2023ம் தேதியன்று மதியம் சுமார் 3.30 மணியளவில் இறந்துபோன செய்யது உசேன் தனது வேலையை முடித்துவிட்டு அவர் தங்கியுள்ள கம்பெனி விடுதி தோவாளை பிள்யையார் கோவில் தெருவில் உள்ள ரூம் எண்.10/37 செல்வதற்காக அவருக்கு சொந்தமான TN 75 R7734 Honda Activa என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் குமாரபுரத்திலிருந்து ஆரல்வாய்மொழி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வரும்போது, அதே ரோட்டில் எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 72 AX7736 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று இறந்துபோன செய்யது

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:48:25 +0530

உசேன் மீது மோதியதில் அவர் கீழே விழுந்து தலை, வலதுகால் முட்டு, இடதுகால் ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆசாரி பள்ளம் மருத்துவமனையில் சேர்த்த பிறகு மேல் சிகிச்சைக்காக முத்து நியூரோ மருத்துவமனையில் கொண்டு சென்றபோது மருத்துவர் பரிசோதித்துவிட்டு மீண்டும் ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். அங்கு செய்யது உசேனை பரிசோதித்த மருத்துவர்கள் அன்று இரவு 8.30 மணிக்கு இறந்துவிட்டதாக தெரிவித்து விட்டனர். விபத்து காலத்தில் இறந்துபோன செய்யது உசேன் என்பவர் 27 வயதுடையவராகவும் நல்ல திடகாத்திரமாகவும் இருந்து வந்தார். விபத்தில் இறந்த செய்யது உசேன் L & T Construction, Nagarkovil–லில் இன்ஜினியராக பணிபுரிந்து போது பணிபுரிந்து வந்துள்ளார். இறந்துபோன செய்யது உசேன் பணிபுரிந்து வந்தகாலத்தில் ரூ.44,705/– மாதச்சம்பளம் பெற்று வந்துள்ளார். மேற்படியாரின் இறப்பினால் அவர்களது குடும்பத்தினர்கள் அன்பு, பாசம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை இழந்து தவிக்கின்றனர். மேலும் இறந்துபோனவரின் உடலை ரூ.50,000/– வரை செலவு செய்து ஈம சடங்குகள் முடித்துள்ளனர். மேற்படி விபத்தானது எதிர்மனுதாரரின் கவனக் குறைவால் ஏற்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ரூ.3,31,06,780/– நஷ்ட ஈடு வழங்க கடமைப்பட்டவர் ஆவார். இந்த விபத்து குறித்து ஆரவாய்மொழி காவல் நிலைய குற்ற எண்.253/2023 பிரிவுகள் 304(ஏ) மற்றும் 187 இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

**3)** எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜர் இல்லை என்பதால் அவரைப் பொறுத்து ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:48:29 +0530

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் பின்வருமாறு:

1) விபத்து யாருடைய தவறுகையின் காரணமாக ஏற்பட்டுள்ளது?

2) மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார்?

3) மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்க பரிகாரங்கள் யாவை?

**5)** இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6)** **<u>பிரச்சனை எண் 1 க்கான தீர்வு</u>:**

கடந்த 10.10.2023 ம் தேதியன்று ஏற்பட்ட சாலை விபத்தில் இறந்துபோன செய்யது உசேனின் வாரிசுதாரர்களுக்கு நஷ்ட ஈடாக ரூ.3,31,06,780/- வழங்கக்கோரி இறந்துபோனவரின் வாரிசுகளான மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**7)** இம்மனுவின் 1ம் மனுதாரர் இறந்துபோன செய்யது உசேனின் தாயார் ஆவார். 2 மற்றும் 3 மனுதாரர்கள் இறந்துபோனவரின் சகோதரர்கள் ஆவார்கள். இம்மனுவின் 1ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.9 வரையான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். இவர் தனது சாட்சியத்தில் 10.10.2023 ம் தேதியன்று மதியம் சுமார் 3.30 மணியளவில் தனது மகனுக்கு சொந்தமான TN 75 R7734 Honda Activa என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் குமாரபுரத்திலிருந்து ஆரல்வாய்மொழி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வரும்போது, அதே ரோட்டில் எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 72 AX7736 என்ற பதிவெண்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:48:32 +0530

கொண்ட மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று தனது மகன் மீது மோதியதில் அவர் கீழே விழுந்து தலை, வலதுகால் முட்டு, இடதுகால் ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில், 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆசாரி பள்ளம் மருத்துவமனையில் சேர்த்த பிறகு மேல் சிகிச்சைக்காக முத்து நியூரோ மருத்துவமனையில் கொண்டு சென்றபோது மருத்துவர் பரிசோதித்துவிட்டு மீண்டும் ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு செய்யது உசேனை பரிசோதித்த மருத்துவர்கள் அன்று இரவு 8.30 மணிக்கு இறந்துவிட்டதாகவும் மனு சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்.

8) இந்த மனுவில் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாமையால் தோன்றாத்தரப்பினராக இருந்து வந்துள்ளார். எனவே ம.சா.1–ன் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை மற்றும் ம.சா.ஆ.2 குற்ற இறுதி அறிக்கையில் இருந்தும் இந்த விபத்தானது எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும்தான் ஏற்பட்டுள்ளது என்றும், அதனாலேயே எதிர்மனுதாரரின் மீது புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிர்மனுதாரரின் கவனக்குறைவே இந்த விபத்திற்கு காரணம் என்று இந்நீதிமன்றம் பிரச்சனை 1 க்கு தீர்வு காண்கிறது.

9) **<u>பிரச்சனை எண்.2 க்கான தீர்வு:</u>**

விபத்து எதிர்மனுதாரரின் கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ளது என பிரச்சனை எண்.1 க்கு இந்நீதிமன்றத்தில் தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இருப்பதாகவோ, விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்கு உரிய காப்பீடு இருப்பதாகவோ தெரியவில்லை என்பதால்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:48:36 +0530

எதிர்மனுதாரர்தான் இழப்பீடு தர கடமைப்பட்டவர் என மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. இதுகுறித்து ஆராயும்போது விபத்து காலத்தில் எதிர்மனுதாருக்கு ஓட்டுநர் உரிமம் இருப்பதையும், தனது வாகனத்திற்கான காப்பீடு அமலில் உள்ளது என்று நிரூபிக்க முன்வராததாலும், எதிர்மனுதாரருக்கு விபத்து காலத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று நிரூபிக்க முன்வராததாலும் மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் இழப்பீட்டுத் தொகையினை செலுத்த எதிர்மனுதாரரே கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் பிரச்சனை 2 க்கு தீர்வு காண்கிறது.

10) <u>பிரச்சனை எண்.3 க்கான தீர்வு</u>

விபத்து காலத்தில் இறந்துபோன செய்யது உசேன் என்பவரின் வயது 27 என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இறந்துபோன செய்யது உசேன் வயது என்ன என்பது பற்றி காண்கையில், மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.8 மற்றும் ம.சா.ஆ.9 இறந்துபோன செய்யது உசேனின் ஆதார் அட்டை நகல் மற்றும் டிப்ளமோ படிப்பு சான்றிதழ் மற்றும் மதிப்பெண் பட்டியல் குறியீடு செய்யப்பட்டு அதில் இறந்துபோன செய்யது உசேனின் பிறந்த தேதி 24.06.1996 என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே செய்யது உசேனின் வயது 27 என்பதை காணமுடிகிறது. இந்நிலையில் ம.சா.ஆ.8 மற்றும் ம.சா.ஆ.9 ன் அடிப்படையில் விபத்து சமயத்தில் இறந்துபோன செய்யது உசேனின் வயது 27 என இத்தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கிறது.

**11)** மேலும் விபத்தின் போது இறந்துபோன செய்யது உசேன் என்பவரின் வயது 27 என்றும், அவர் இறப்பதற்கு முன்பாக Mechanical Engineer படித்து இருந்ததாக மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.9 கல்விசான்றிதழும்,

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:48:40 +0530

மற்றும் இறந்துபோன செய்யது உசேன் L & T Construction நிறுவனத்தில் வேலை பார்த்து மாதம் ரூ.44,000/- சம்பளம் வாங்கினார் என்பதற்கான சான்றிதழ் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.7 மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், L & T நிறுவனத்தில் Executive Accountant ஆக பணிபுரியும் சந்தனசெல்வம் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 வரையான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். இவர் தனது சாட்சியத்தில் இறந்துபோன செய்யது உசேன் தங்களது நிறுவனத்தில் ஆகஸ்ட் 2015 ல் Trainee Engineer ஆக பணியில் சேந்தபின்னர் Site Engineer ஆக பணி நியமனம் செய்யப்பட்ட 3 வருடங்கள் வேலை பார்த்த பின்னர் 2020 ம் ஆண்டு Assistant Engineer ஆக பணிஉயர்வு பெற்று 2023 ம் வருடம் வரை வேலை பார்த்து மாதம் ரூ.45,000/- வரை சம்பளம் வாங்கியதாகவும், தங்கள் நிறுவனத்தில் 3-4 வருடத்திற்கள் பணி உயர்வு வழங்கப்படும் என்றும் அதன்படி இறந்துபோன செய்யது உசேன் 2023-2024 ல் Executive Engineer ஆக பணி உயர்வு பெற்றிருந்தால் அவரது மாத நிகர சம்பளம் ரூ.58,000/- முதல் ரூ.60,000/- வரை இருந்திருக்கும் என்றும் மேற்படி வழக்கு சம்பந்தமாக சாட்சியம் அளிக்க தனக்கு வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் அசல் சா.சா.ஆ.1 ஆகவும், இறந்துபோன செய்யது உசேனின் Service Certificate கணினியில் இருந்து எடுக்கப்பட்ட பிரிண்ட் அவுட் சா.சா.ஆ.2 ஆகவும், இறந்துபோன செய்யது உசேனின் ஜூலை முதல் ஆகஸ்ட் 2023 வரையிலான சம்பள பட்டியல் கணினியில் இருந்து எடுக்கப்பட்ட பிரிண்ட் அவுட் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி இறந்த செய்யது உசேன் இருக்கும்போது மாதம் ரூ.45,000/- சம்பாதித்தார் என்று நிர்ணயம் செய்யப்படுகிறது.

**12)** மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.8 மற்றும் ம.சா.ஆ.9 ன் படி இறந்துபோனவரின் வயது 27 என நிர்ணயம் செய்வது பாதுகாப்பாக அமையும்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:48:44 +0530

என இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. எனவே ம.சா.ஆ.8 மற்றும் ம.சா.ஆ.9 ன் படி இறந்துபோனவரின் வயது 27 என்பதையும், அவரது மாத வருமானம் ரூ.45,000/- என நிர்ணயித்துள்ளதை கருத்தில் கொண்டும் **நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி எதிர் பிரணாய் சேத்தி** (2017 (2) TNMAC 609) (SC) வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கூறியுள்ள வழிகாட்டுதலைப் பின்பற்றி, மேற்படி நபரின் எதிர்கால வருமானம் 50% என எடுத்துக்கொண்டு (45,000 X 50 % =22,500) = ரூ.45000 + 22,500 = **ரூ.67,500/-** என மாத வருமானம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இறந்த நபர் திருமணமாகாதவர் என்பதாலும், **சரளா வெர்மா எதிர் டெல்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேசன் (2009 (2) TNMAC 1) (SCC)** வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி செய்யது உசேன் இறக்கும்போது அவர் 27 வயதினர் என்பதையும், திருமணம் ஆகவில்லை என்பதையும் கருத்தில்கொண்டு அவருடைய வருமானத்தில், அவரது சொந்த செலவிற்காக 1/2 பாகம் எடுத்தது போக மீதி 1/2 பாகத்தை தன்னுடைய குடும்பத்திற்கு கொடுத்திருப்பார் என்று கருதி அதன் அடிப்படையில் ரூ.67,500-33,750=ரூ.33,750/-ம் செய்யது உசேன் கொடுத்திருப்பார் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. சரளவர்மா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இறந்துபோன செய்யுது உசேனின் வயது 27 என்பதை கருத்தில்கொண்டு 17 பெருக்கல் குறியீட்டை இந்த தீர்ப்பாயம் கணக்கில் கொண்டு வருமான நஷ்ட ஈட்டை நிர்ணயம் செய்கிறது. அந்த அடிப்படையில் (ரூ.33,750x12X17)=68**,85,000/-** வருமான இழப்பீடாக மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும், 1ம் மனுதாரர் தனது மகனின் அன்பு மற்றும் பாசத்திற்குரிய மகனை இழந்துள்ள நிலையிலும், 2 மற்றும் 3ம் மனுதாரர்கள் தான் இழந்த தனது சகோதரனின் அன்பு மற்றும் பாசத்திற்காக தலா ரூ.15,000/- வீதம் **ரூ.45,000/-மும்**, ஈமக்கிரியை செலவிற்கு **ரூ.15,000/-மும்,** மேலும்

MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.07 18:48:48 +0530

இறந்துபோன செய்யது உசேனின் உடலை சம்பவ இடத்திலிருந்து அவரது சொந்த ஊருக்கு எடுத்துச் செல்ல **ரூ.10000/-மும்**, உடமைகள் இழப்பிற்காக **ரூ.10,000/-மும்,** ஆக மொத்தம் **ரூ.68,85,000/-** மனுதாரர்களுக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

**13)** கீழ்கண்ட விவரங்களின் அடிப்படையில் மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்கத்தக்கது .

| | |
|---|---|
| வருமான இழப்பு | 68,85,000.00 |
| அன்பு மற்றும் பாசத்திற்காக மனுதாரர்களுக்கு தலா ரூ.15,000/- வீதம் | 45,000.00 |
| ஈமக்கிரியை செலவிற்காக | 15,000.00 |
| போக்குவரத்து செலவிற்காக | 10,000.00 |
| உடைமைகள் இழப்பீட்டிற்காக | 10,000.00 |
| **மொத்தம்** | **ரூ.69,65,000.00** |

**முடிவாக,**

1) இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டு,

2) எதிர்மனுதாரர், 1 முதல் 3 மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடாக **ரூ.69,65,000/-**ஐ மனு தாக்கல் செய்த 02.10.2024 தேதியிலிருந்து தொகை முழுவதும் செலுத்தப்படும் தேதிவரை வரை 7.5 சதவீத வட்டி மற்றும் செலவு தொகை **ரூ.1,58,183/-** வுடன் ஒரு மாத காலத்திற்குள் **Virtual Account Number of this Court in the State Bank of India, Bharathi Nagar Branch, Ramanathapuram (IFSC Code No.SBIN0004266 in to the Virtual Account No.MACT91MCOP2012024)** வைப்பீடு செய்ய வேண்டுமென்றும்,(Excluding the period of dismissal for default, if any);

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:48:51 +0530

3) எதிர்மனுதாரர் செலுத்தும் மேற்படி தொகையில் 1ம் மனுதாரருக்கு 50% (ரூ.34,83,000/-)மும் 2 மற்றும் 3 மனுதாரர்களுக்கு தலா ரூ.17,41,000/-மும் கிடைக்கக்கூடியது என்றும்,

4) எதிர்மனுதாரர் மேற்படி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த பின்னர் 1 முதல் 3 மனுதாரர்கள் அவர்களது பங்குத்தொகையில் 50 சதவீதம் விகிதாச்சார வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், மீதமுள்ள தொகையை ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கி இராமநாதபுரம் கிளையில் 3 ஆண்டுகளுக்கு மனுதாரர்களின் பெயரில் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

5) வழக்கறிஞர் கட்டணம் ரூ.89,150/-

6) பாக்கி நீதிமன்ற கட்டணம் ரூ.68,650/-ஐ 15 நாட்களுக்குள் மனுதாரர்கள் செலுத்தவேண்டும் என்றும், அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் செலுத்த தவறிய காலத்திற்கு உரிய வட்டியை இழப்பதோடு செலுத்தும்வரை இவ்வுத்தரவு நிறைவேற்றுவதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது.

7) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.CMP.Nos.264 to 281 of 2021 M/s Cholamandalam Ms.General Insurance Company Ltd /Vs/ Mr.Ayyanar and others என்ற முன் தீர்ப்பில் பிறப்பித்த உத்தரவுப்படி நிறைவேற்றாணையின் விஷயங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கத் தேவையில்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:48:54 +0530

TNRM010047332024



| **மனுதாரர் தரப்பு** | | **செலவுத் தொகை விபரம்** |
| --- | --- | --- |
| மனுவிற்கான வில்லை | – | 69,023.00 |
| வக்காலத்து | – | 10.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | – | 89,150.00 |
| | | ----------- |
| Total | – | ரூ.1,58,183.00 |
| | | ----------- |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 07–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:49:00 +0530

மோட்டார் வாகன விபத்துக்
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிபதி
இராமநாதபுரம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

| | | |
| --- | --- | --- |
| ம.சா.1 | .. | திருமதி.ஜஹான் பீவி |
| ம.சா.2 | .. | திரு.சந்தனசெல்வம் |

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>:–**

| | | |
| --- | --- | --- |
| ம.சா.ஆ.1 | 11.10.2023 | விபத்து சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | 19.12.2023 | விபத்து சம்பந்தமாக தாக்கல் செய்த இறுதி அறிக்கைவலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| ம.சா.ஆ.3 | -- | விபத்தில் இறந்தவரின் செப்டம்பர் 2023 க்கான சம்பள பட்டியல் |
| ம.சா.ஆ.4 | 11.10.2023 | இறந்துபோன செய்யது உசேனின் பிரேத பரிசோதனை அறிக்கை ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.5 | 02.12.2023 | இறந்துபோன செய்யது உசேனின் இறப்பு சான்றிதழ் வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| ம.சா.ஆ.6 | 01.12.2023 | இறந்துபோன செய்யது உசேனின் வாரிசு சான்றிதழ் வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| ம.சா.ஆ.7 | -- | இறந்துபோன செய்யது உசேன் வேலை பார்த்த நிறுவனத்தால் வழங்கப்பட்ட ID card ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.8 | -- | மனுதாரர்களின் ஆதார் அட்டை (3 எண்ணிக்கைகள்) ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.9 | -- | இறந்துபோன செய்யது உசேனின் டிப்ளமோ படிப்புச்சான்று மற்றும் மதிப்பெண் சான்று ஜெராக்ஸ் நகல். |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>:-:-**

**இல்லை.**

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 18:49:04 +0530

மோட்டார் வாகன விபத்துக்
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிபதி
இராமநாதபுரம்.